# உபாகமம்

காதேஸ்-பர்னாவில் ஏற்பட்ட கிளர்ச்சியின் மூலமாக ஏற்பட்ட (உப 13–14),“வனாந்தர அலைச்சல்” நியாயத் தீர்ப்பானது 40 வருடத்துடன் நிறைவுபெற்றது, (எண். 15–36). இதன் பிரகாரம் இஸ்ரவேலர்கள் மோவாப் சமவெளியி லுள்ள கிழக்கு யோர்தானின் சமவெளியில் முகாமி ட்டிருந்தார்கள்( 1:5 ,எண். 36:13). உபாகமம் என்ற சொல் லிற்கு “இரண்டாவதுசட்டம்” என்று அர்த்தமாகும்.இது மோசேயினால் போதிக்கப்பட்ட பாடங்களாகும்.ஆசீர்வாதமும்,சாபமும் குறிப்பிடப்பட்டுள்ளது, மோசே எழுதிய இறுதிப் புத்தகாமுமாகும். இது முக்கியமாக இஸ்ரவேலர்களின் 20 வயதிற்குட்பட்ட இளைஞர்களை நோக்கமாகக் கொண்டது. (எண் 14:29-31).

| **கால வரிசை** |
|---|
| **கி.மு 1446.. யாத்திரகாமம்.நியாயப்பிரமாணம் கொடுக்கப்படல்** |
| **கி.மு 1443, காதேஸ் பர்ணா, வனாந்தர யாத்திரை ஆரம்பம்.** |
| **கி.மு 1406.---யோர்தானில் இஸ்ரவேலர்கள், உபாகம நிகழ்வுகள், இஸ்ரவேலர்கள் கானானுக்குள் செல்லுதல்.** |

**பின்னணி;-** காதேஸ்- பர்னாவில் ஏற்பட்ட கிளர்ச்சியின் மூலமாக ஏற்பட்ட(எண். 13–14), **“வனாந்தர அலைச்சல்”** நியாயத்தீப்பானது 40 வருடத்துடன் நிறைவுபெற்றது, (எண். 15–36).இதன்பிரகாரம் இஸ்ரவேலர்கள் மோவாப் சமவெளியிலுள்ள கிழக்கு யோர்தானின் சமவெளியில் முகாமிட்டிருந்தார்கள்( 1:5 ,எண். 36:13).உபாகமம் என்ற சொல்லிற்கு ***“ இரண்டாவது சட்டம்”*** என்று அர்த்தமாகும்.இது மோசேயினால் போதிக்கப்பட்ட பாடங் களாகும். இது முக்கியமாக இஸ்ரவேலர்களின் 20 வயதிற்குட்பட்ட இளைஞர்களை நோக்கமாகக் கொண்டது. (எண். 14:29-31).

**எழுதியவர்;- மோசே**

மோசே இந்தப் புத்தகத்தை எழுதினார் என்பதற்கான குறிப்புக்கள் இந்தப் புத்தகத்தில் உள்ளன. (1:1; 4:44).பார்த்தவர்களின் விபரமும்,இதன் பேச்சுக்களும் மோசேதான் இதனை எழுதினார் என்பதற்கு ஆதாரமாக உள்ளன.அல்லது மோசேயுடன் இருந்த ***யோசுவா*** எழுதியிருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில் சில குறிப்புகள், மோசே சிலபகுதிகளைத்தான் எழுதினார் என்பதாக கூறுகின்றது. (மத் 19:7 , 24:1-4; லூக்கா20:28 ,25:5-6).

**காலமும் இடமும்.. கி.மு. 1446 இல் யாத்திரகாமம் இடம்பெற்ற போது** உபாகமம் 1406 கி.மு. எழுதுப்படவில்லை.வனாந்தர அலைச்சல் சம்பந்தமான குறிப்புகள் மோசேயிடம் இருந்திருக்

கும், அதனால் எண்ணாகமம் மாதிரியே உபாகமக் குறிப்புக்கள் இருந்திருக்கும். 40 வருடம் விஷேசித்த ஆயத்தம் கானான் தேசத்திற்குள் நுழைவதற்காக மேற்கொள்ளப்பட்டது.

**நோக்கம்.**

- கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின் விபரங்களும், இஸ்ரவேலர்களுடனான உடன்படிக்கை பற்றிய விபரங்களும் தேவைப்படின் , ***ஆதியாகமம்*** இஸ்ரவேலர்கள் தெரிந்து கொள்ளப்பட்டதையும், ***யாத்திரகாமம்*** அவர்களின் மீட்பையும், ***லேவியராகமம்*** அவர்கள் பரிசுத்தமடைவதையும், ***எண்ணாகமம்*** அவர்கள் செல்லும் திசையையையும் பற்றிக் கூறுகின்றது.
- கீழ்ப்படிபவர்கள் நன்மையையும், கீழ்ப்படியாதோர் தண்டனையையும் அனுபவிப்பார்கள்.

**சிறப்பம்சங்கள்;-**

- லேவியராகமம் போலவே உபாகமமும் கர்த்தருடைய வார்தையை முக்கியப்படுத்துகின்றது.(4:1-2, 9; 11:18-20; 12:32; 30:11-14).
- இயேசுவும் தன்னுடைய ஊழிய ஆரம்பத்தில் சாத்தானால் சோதிக்கப்படும் போது மூன்று முறையும் உபாகமத்திலிருந்து குறிப்புக்களைக் கூறியுள்ளார். மத்தேயு 4;4, உபா.8;3 யும், மத்தேயு 4;7, உபாக. 6;16 யும், மத்தேயு 4;10 உபா. 6;13 யும் காண்பித்தார்.
- இஸ்ரவேலர்கள் குறித்துக் கூறப்பட்ட முக்கிய தீர்க்கதரிசனங்கள் இதில் அடங்கியுள்ளது.

| ***தீர்க்கதரிசனம்*** | ***நிறைவேற்றப்பட்டதற்கான குறிப்புகள்.*** |
|---|---|
| வெற்றியுடன் கானானுக்குள் நுழைதல். (7:2; 9:1-3; 31:3) | யோசுவா புத்தகத்தில் காணப்படுகின்றது |
| கானானில் இருக்கும்போது பாவம்(31:16-29) | நியாயாதிபதிகள்-----2 ராஜாக்கள்16; 18–24 வரையுள்ள புத்தகங்களில் காணப்படுகின்றது |
| நாடுகடந்தப்படல்(4:26-28) | 2 ராஜாக்கள். 17; 25; எசேக்கியேல்–தானியேல் புத்தகங்களில் காணப்படுகின்றன. |
| சிறையிருப்பிலிருந்து திரும்புதல்(30:1-3) | எஸ்றா-----நெகேமியா புத்தகங்களில் காணப்படுகின்றன. |

| **சுருக்கம்** |
|---|
| **1 வது உபதேசம் (1:1–4:43)** |
| வனாந்தரம் நினைவு கூரப்படல் (1–3) |

## உபாகமம்

| |
|---|
| சீனாய் நினைவு கூரலப்படல்; கீழ்ப்படிதலுக்கான அழைப்பு (4:1-43) |
| **2 வத உபதேசம் (4:44–26:19)** |
| பத்துக்கட்டளைகள் மீள் பார்வை(4:44–5:33) |
| முழு இருதயத்தோடு அர்ப்பணம் செய்வதற்கான அழைப்பு (6) |
| தெரிவு செய்யப்பட்ட ஜனங்களுக்கான ஆசீர்வாதங்கள்.(7) |
| தெரிவு செய்யப்பட்ட தேசங்களுக்கான ஆசீர்வாதங்கள்.(8) |
| முரட்டாட்டத்தை நினைவு கூருதல்(9) |
| மீண்டும் பத்துக் கற்பனைகள் கொடுக்கப்படல் (10:1-11) |
| மீண்டும் முழுஇருதயத்தோடு அர்ப்பணம் செய்வதற்கான அழைப்பு (10:12-22) |
| கீழ்ப்படிதலுக்கும் அன்புக்குமான வெகுமானங்கள். (11) |
| பொய்யான மதமும், உண்மையான ஆராதனையும். (12) |
| பொய்த் தீர்க்கதரிசிகள்.(13) |
| பலவிதமான ஒழுங்குகள்.(14–15) |
| முக்கியமான மூன்று பண்டிகைகள் மீள்பார்வை (16:1-17) |
| பலவிதமான ஒழுங்குகள் (16:18–25:19) |
| உக்கிராண விசாரிப்பும் கடமைகளும் (26) |
| **3 வத உபதேசம் (27–30)** |
| ஆசீர்வாதமும் சாபமும்.(27–28) |
| அர்ப்பணிப்புக்கான அழைப்பு (29–30) |
| மோசேயின் இறுதி நாட்கள். (31–34) |
| நியாயப்பிரமாணம் நீக்கம், யோசுவாவின் செயற்பாடுகள். (31) |
| மோசேயின் பாடல்கள் (32) |
| மோசேயின் இறுதி ஆசீர்வாதங்கள் (33) |
| மோசேயின் மரணம் (34) |

**1வது உபசேம் (1:1–4:43)**

**1:1-8 வனாந்தரம் நினைவு கூரல்**;-அறிமுகம்.உபகாமத்தின் தொடக்கமானது, 11 நாள் பயணமாகும்.துரதிஸ்டவசமாக 40 வருட அலைச்சலாக மாறியது.இப்போது, இஸ்ரவேலர்கள் யோர்தனுக்கு அருகில், வாக்குறுதி செய்யப்பட்ட நாட்டுக்குள் நுழைவதற்கான ஆயத்தம் செய்கின்றார்கள், மோசே தன்னுடைய முதலாவது உபதேசத்தை, கர்த்தருக்கும் அவர்களுக்கும் இடையிலுள்ள உறவுகளைப் பற்றிய உபதேசத்தை கொடுக்கிறார்.அதிகாரம் 1-4 இல் அவர் சீனாயிலிருந்து யோர்தானுக்கான பிரயாணத்தை நினைவு கூருகின்றார்.

**1:9-18 ; ஆவிக்குரிய 70 உதவியாளர்கள்.** சீனாயை விட்டுப் புறப்படும் முன்பாக, மோசே இஸ்ரவேல் ஜனங்களின் பெருக்கத்தைப் பார்த்து, திகைத்தவராய், தான் ஒருவனாக எப்படி இந்த பெரும் ஜனக்கூட்டத்தை வழிநடத்துவேன் என்று அங்கலாய்த்தார். தன்னுடைய மாமனாரின் ஆலோசனைப்படி, தனக்கு உதவியாக இருக்கும்படி, 70 ஆவிக்குரிய மனுஷரை நியமித்தான். (யாத். 18:13-27).(பழைய ஏற்பாட்டுக்காலத்தில் பரிசுத்த ஆவியின் செயற்பாடுகள் பார்க்க வேண்டுமாயின் 1 சாமு 9;27–10;8 வாசிக்கவும்)

**1:19-46 காதேஸ்-பர்னா;-** "அவரை நீங்கள் மறத்தீர்கள், அதனால் அவர் உங்களை மறத்தார்"மோசே, காதேஸ்-பர்னாவில் ஏற்பட்ட கிளர்சியின் விளைவால் ஏற்பட்ட அழிவுகளை நினைவு கூர்ந்தார். (எண். 13–14),அப்போது இஸ்ரவேலர்கள் கானான் தேசத்திற்குள் நுழைவதற்கு மறுத்து விட்டார்கள்.வேவுக்காரரை அனுப்பும்படி கேட்டுக் கொண்டனர். இஸ்ரவேலர்களின் ஆரம்ப கீப்படியாமையானது, (1;26) பல பாவங்களுக்கு ஒன்றன் பின் ஒன்றாக வழிநடத்தியது.அவர்கள் கர்த்தருடைய வாக்குறுதிகளை நம்ப மறுத்ததினால் ஏற்பட்ட விளைவுகளே இவைகளாகும்.(1:31)
ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல உங்களை கூட்டிவந்தாரே. (1:32).இஸ்ரவேலர்கள் கர்த்தரை நம்பமறுத்தபடியால், கர்த்தரும் அவர்களை நம்பவில்லை, அதனால் அவர் இளம் வாலிபரை கானானுக்குள் நுழைய விடாமல் தடையை ஏற்படுத்தினார் (1:35, 39) .அத்துடன் அவர்களை வனாந்தரத்தில் அலைந்து திரிவதற்கும் ஏற்பாடுசெய்தார். (1:40; எண். 14:26-37)."***தன்வினை தன்னைச் சுடும்"*** என்ற பழ மொழியை நாம் இதில் நினைவு கூருதல் மிகவும் பொருத்தமாகும்.அவர்கள் போகமாட்டோம் என்ற வினையை விதைத்தார்கள், அதனால் வனாந்தரத்திலேயே மடிந்து செத்தார்கள். இஸ்ரவேலர்களின் கீழ்ப்படியாமை கர்த்தரைத் துக்கப்படுத்தியது, அதனால் கர்த்தர் அவர்களை கடுமையான நியாயத்தீர்புக்குட்படுத்தினார்.மரணத்தீர்ப்பு கூறப்பட்டபோது,இஸ்ரவேலர்கள் சிந்தனையை மாற்றினார்கள், ஆனால் அது காலம்கடந்ததாக இருந்தது.( 1:41-46; எண் 14:39-45). அனேகமானவர்கள் தங்கள் பாவத்திகாக அகப்பட்ட பின்பே மனம் வருந்தினார்கள்.

**(2:1-3)38 வருடங்கள் அலைச்சலிலே கழிந்தது**.நாங்கள் பல வருடங்களாக சேயீர் மலையைச் சுற்றி பல வருடங்கள் அலைந்தோம், அந்த அலைச்சல் மிக நீண்டகாலமானது அதாவது 38 வருடங்கள் என துக்கத்தோடு மோசே கூறினார்.எண்ணாகமத்தில் 15-19ம் அதிகாரங்கள் இது குறித்து விளக்குகின்றது.உபாகமத்தில், 38 வருடங்கள் கழிந்த பின்பு என்ற ஒரே வார்த்தையில்

கூறப்படுகின்றது. கர்த்தர் இந்த நீண்டகால அலைச்சலைக் கட்டளையிட்டார்.தற்போது அவர், அவர்களை வடக்குப்பக்கமாக கானானை நோக்கி பிரயாணத்தைத் தொடரும்படி வழிகாட்டி னார் **2:4**-23 "உன் இனத்தாருடன் போர் தொடுக்காதே". வடக்குப்பக்கமாக இஸ்ரவேலர்கள் பிரயாணத்தைத் தொடங்கும் போது, உங்கள் இனத்தாருடைய தேசங்களுக்கூடாகப் பிரயாணம் செய்யும் போது, ஏசாவின் பரம்பரையினராகிய ஏதோமியர்கள்,மோவாப்பியர்கள், அம்மோனியர் களாகிய லோத்துவின் பரம்பரையினர் உள்ளடங்கலாக , அவர்களுடன் யுத்தம் செய்யாதே என்று கர்த்தர் கட்டளையிட்டார்.

**2:24-37 "அவர்கள் முதலில் உங்களைத் தாக்கினால்,அவர்களைத் திருப்பித் தாக்குங்கள்".** அதாவது அந்த நாடுகள், இவர்களைத் தாக்குவதற்கு முற்பட்டால்,அவர்களைத் திருப்பித்தாக் குவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள்.அம்மோனிய ராஜாவாகிய சிகோன் தாக்கியபோது, இஸ்ரவே லர்கள் , அவர்கள் எல்லாரையும் முறியடித்து வெற்றி கொண்டு ஆண்,பெண் பிள்ளைகள் யாவரையும் அழித்துவிட்டார்கள். (2:34).ஏன் இவ்வாறான நேரங்களில் சிறுவர்களைக் கர்த்தர் கொலைசெய்வதற்கு அனுமதித்தார்? இவர்கள் நீதியான முறையில் வளர்க்கப்படாதமையே இதற்கான காரணமாகும். விபரம் தெரிவதற்கு முன்பு அவர்கள் கொலைசெய்யப்பட்டபடியால், அவர்கள் நரகத்திலிருந்து தப்புவிக்கப்பட்டிருக்க வாய்ப்புக்கள் உண்டு.

**3:1-11 மிகப்பெரிய கட்டிலுடைய மனிதன்.** வடக்குப்பிரயாணம் யோர்தானின் கிழக்கை நோக்கித் தொடர்ந்தது, இஸ்ரவேலர்கள் ஓக் , பாசான் தேசத்து அம்மோனிய ராஜாவைத் தோற்கடித்தார்கள், (3:1-11; எண் 21:31-35).ஓக் ஒரு சிறிய மனிதனல்ல. அவனுடைய இரும்புக்கட்டில் 13 அடிக்குமேற்பட்ட நீளமும், 6 அடிக்கு மேற்பட்ட அகலமுமாக இருந்தது.

**3:12-20 இரண்டரைக் கோத்திரங்களின் எல்லைகள்**. கோத்திரங்களான ரூபன், காத், அரைப்ப குதியான மனாசே ஆகியவர்கள் யோர்தானின் கிழக்குப்பக்கத்தில் தங்கினார்கள், சவக்கடலில் இருந்து கலிலேயாக்கடலின் வடபக்கமாக தாங்கினார்கள். (எண்.32:1-42).

**3:21-22 .தனக்குப் பதிலானவரை மோசே திரும்பவும் அறிவித்தார்.** சீகோனையும் (2:30-33) ஓக்கையும் (3:1-3), வெற்றி கொண்டது போல யோசுவா, வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் நுழையும் போதும் யோசுவா உங்களுடன் இருப்பார் என்று மீண்டும் உறுதியாகக் கூறினார். (யோசு.1:1-9).

**3:23-29 ஆனால் மோசேக்கோ அந்த பாக்கியம் கிடைக்காது.** கர்த்தர் ஏற்கனவே,மோசே வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் செல்லமாட்டார் என்று அவருக்கு கூறியிருந்தார். (எண்20:12; 27:12-14).திரும்பவுமாய்,மோசே இதனைப்பற்றி கர்த்தரிடம் கோட்டபோது,இல்லை என்றவிடையே கர்த்தர் கூறினார்,ஆனால் பிஸ்காவின் மலை உச்சியில் ஏறி தேசத்தை ப்பார்ப்பதற்கு அனுமதித்தார். (34:1).

**4:1-8 சீனாயை ஞாபகப்படுத்தல்**." நீ வாழவேண்டுமானால் இந்த நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்" 38 வருட வனாந்தர வாழ்க்கையை ஞாபகப்படுத்திப் பார்க்கும் போது,மீண்டுமாய் அவற்றை வலியுறுத்தி ஜனங்களுக்கு கூறமுடிவு செய்தார்.அவர்களை அழைத்து நியாயப்பிர மாணத்துக்கு கீழ்ப்படியுங்கள், அப்போது பிழைப்பீர்கள் என்று உபதேசித்தார். (4:1).மோசேயி டமிருந்து கிடைத்த நியாயப்பிரமாணத்திற்கும்,இயேசுக்கிறிஸ்துவிடமிருந்து கிடைத்த கிருபைக்

கும் இடையில் பெரிய வித்தியாசங்கள் உண்டு.(யோவான் 1:17). நியாயப்பிர மாணம்,"கீழ்படிந் தால் ***வாழ்வு***, கீழ்படியாமல் விட்டால் ***மரணம்*** என்று கூறுகின்றது ஆனால் கிருபையோ "விசுவாசித்து வாழ்" என்று கூறுகின்றது.

**4:9-14 இந்த அற்புதமான செய்தியை உங்கள் பிள்ளைகளுக்கும் போதியுங்கள்**
இஸ்ரவேலர்கள் சீனாயில் நடந்த சகல அற்புதங்களையும், அங்கு கர்த்தர் கொடுத்த நியாயப்பிரமாணத்தையும்,தங்களுடைய பிள்ளைகளுக்கும்,பேரப்பிள்ளைகளுக்கும் சொல்ல வேண்டும்..

**4:15-31 விக்கிரகங்கள் விலக்கப்படல் வேண்டும்**. மோசே விக்கிரக ஆராதனைபற்றி எச்சரிக்கை செய்கிறார்,கர்த்தர் எரிச்சலுள்ள தேவன்(4:24)அதுமட்டுமல்ல அவர் இரக்கமுள்ள தேவன்4; 31,இஸ்ரவேலர்கள் அவருடைய சொந்த சொத்து, தன்னுடைய மக்களை கண்மணிபோல் பாதுகாக்கிறார், தன்னுடைய பிள்ளைகள் உருவங்களையோ,அல்லது இயற்கையையோ வணங்கினால், அவர்களை தேசத்திலிருந்து சிதறடிப்பார்.
**4:32-40 "நாம் அவரை அறிந்திருக்கிறோம்"** படைப்பின் காலத்திலிருந்து இஸ்ரவேலர்கள் மட்டும் கர்த்தரால் தெரிவு செய்யப்பட்டவர்களாகும்.அத்துடன் அவர் பேசுவதைக் கேட்டவர்களும் இவர்களே , எகிப்திலிருந்து அவர்களை அற்புத வல்லமையால் மீட்டதற்குச் சாட்சியும் இவர்களேயாகும்.அந்த அற்புதமான அன்புள்ள தேவன் தன்னுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியுமாறு இவர்களை வேண்டுகின்றார்.

**4:41-43 யோர்தானின் கிழக்கு நகரங்கள் இரட்சிப்பின் நகரங்கள் எனப்படும்**. பழிவாங்குதல் என்பது புறஜாதிகள் மத்தியில் சர்வசாதாரணமாக இடம்பெறுகிறது, ஆனால் கர்த்தருடைய மக்கள் மத்தியில் இது அனுமதிக்கப்படவில்லை. இதற்காகவே கர்த்தர் ஆறு நகரங்களை அடைக்கலப்பட்டணமாக ஏற்பாடு செய்தார்.யோர்தானுக்கு கிழக்குப் பக்கமாக மூன்று நகரங்களும், தெற்குப்பக்கமாக மூன்று நகரங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன. தவறுதலாக மனித கொலைகளைச் செய்தவர்கள் அதற்குள் ஓடி அதன் பிரச்சனைகள் முடிவுக்கு வரும்வரை அடைக்கலம் பெற்றுக் கொள்ள முடியும், கிழக்குப்பக்கமான மூன்று நகரங்களின் பெயர்கள் தற்போது கொடுக்கப்படுகின்றன, மிகுதி மூன்றும் இஸரவேலர்கள் கானானுக்குள் சென்ற பிற்பாடு கொடுக்கப்படும். (19:1-13; யோசு. 20:7).

**2வது உபதேசம். (4:44–26:19)**

**4:44-49 நியாயப் பிரமாணத்தின் இன்னுமொரு பார்வை**. கனியற்ற இஸ்ரவேலர்களின் வனாந்தர வாழ்க்கயை மீள்பார்வை செய்வோம்.மோசே திரும்பவுமாக நியாயப்பிரமாணங்களை கூறுகின்றார்.புதிய பிரமாணமானது " இதுதான் சட்டம்" என்று தொடங்குகின்றது. (4:44), இதனைத் தொடர்ந்து கடைப்பிடியுங்கள் என்றும் கூறப்படுகின்றது. 26:19.

**5:1-27 "முதலாவது நியாயப்பிரமாணத்தைத் தேடுங்கள்"**.மோசே திரும்பவுமாக நியாயப்பிரமாணத்தை புதிய பரம்பரையினர்களுக்கு கூறத் தொடங்குகிறார். (யாத் 20), இவை கற்பல

கைகளில் கர்த்தரால் தான் எழுதப்பட்டவை என்றும் ஞாபகப்படுத்துகிறார், அதுமட்டுமல்லாமல் இஸ்ரவேல் ஜனங்கள் அதைக் கேட்டு கர்த்தர் கூறிய எல்லாவற்றிற்கும் கீப்படிவோம் என்று ஏற்றுக் கொண்டார்கள். (5:27)

**5:28-33 மிகுதியான சட்டங்கள்;-"அப்பொழுது நீங்கள் பிழைத்துக் கொள்வீர்கள்"** நீங்கள் சுதந்தரிக்கும் தேசத்திலே பிழைத்துச் சுகித்து நீடித்திருக்கும்படி, உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு விதித்த வழிகளெல்லாவற்றிலும் நடக்கக்கடவீர்கள். இங்கே நியாயப் பிரமாணத் தில் மூன்று பகுதிகளைக் காணலாம். இவை முன்றுவிதமான யாத்திரைகளிற்கும் பொருத்த மானதாகும். **1.கட்டளைகள்**. (யாத் 20:1-17). ***2. சமூக வாழ்வை வழிநடத்துவதற்கான சட்டங்கள் (யாத். 21–23***). **3. ஆராதனை செய்வதற்கான சட்டங்கள்** (யாத் 21–23)
**6:1-5 "அஸ்திபார வரிகள்".** நீ உன்தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்பு கூருவாயாக. பரிசேயர் இயேசுவிடம் கற்பனைகளில் எந்தக் கற்பனை சிறந்தது என்று கேட்டார்கள் அதற்கு இயேசு உபாகமம் 6: 5 இனையே குறிப்பிட்டார். (மத் 22:34-40).இதுவே அஸ்திவாரமாகும், அதாவது பிரதானமானதாகும் என்றார்.இதுவே இன்றய கிறிஸ்தவ வாழ்வுக்கும் அஸ்திபாரமான பிரதானமான கற்பனையாகும். இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்." (6:4),
**6:6-25 கர்த்தருடைய** வார்த்தைகள் இருதயத்தில் பதித்து வைத்தல் வேண்டும், அதைப்போல சிரசிலும் இருத்தல் வேண்டும்.இரவோ, பகலோ நேரம் கிடைக்கும் நேரத்திலெல்லாம் உன் பிள்ளைகளுக்கு வேதத்தைப் போதிப்பாயாக. ஜனங்கள் இதைச் செய்திருந்தால், நியாயா திபதிகளின் தோல்விகள் தவிர்க்கப்பட்டிருக்கும்.அவைகளை உன்கையின்மேல் அடையா ளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன்கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக் கக்கடவது. நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து,அவைகளை உங்கள் கையின் மேல் அடையாளமாகக்கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக் குறியாக வைத்துக் கொள்வாயக, 11:18
7:1-5 கர்த்தர் தள்ளிவிட்டவர்களோடு உடன்படிக்கை பண்ணவும் அவர்களுக்கு இரங்கவும் வேண்டாம். ஏழு ஜாதிகள் 7;1 இல் புறப்பட்டுள்ளார்கள், அவர்கள் முழுப்பேரும் புறஜாதியார் கள்,தற்போது அவர்கள் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் குடியிருக்கிறார்கள்.அவர்கள் யாவரும், குழந்தைகள், ஆண்,பெண் யாவரும் அழிக்கப்பட வேண்டியவர்கள்.இதில் குறைவானதை இஸ்ரவேலர்கள் செய்வார்களாயின் அவர்களுடன் இஸ்ரவேலர்கள் ஒத்துப் போகின்றார்கள் என்பதே அதன் பொருளாகும்.
7:**6-11 "அவரை நேசிக்கும் படியாக கர்த்தர் எங்களைத் தேர்ந்தெடுத்திருக்கின்றார்".** கீழ் படிவுள்ள ஆபிரகாம் எனும் ஒரு மனிதனை தெரிவு செய்து.அவன் சந்ததியாகிய,இஸ்ரவேலர்கள் மற்ற எல்லா ஜாதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டபடியால் அவர்கள் பரிசுத்தமானவர்கள். நீங்கள் தகுதியானவர்கள் என்று கர்த்தர் உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை, மாறாக, கர்த்தருடைய நிபந்தனையற்ற அன்பினாலும்,உடன்படிக்கையாலும் இஸ்ரவேலர்களை நேசித்து அவர்கள் மீது இரக்கம் காண்பிக்கின்றார்.

***7:12-26 கீழ்படிதல் என்பது, பயத்திலிருந்து விடுதலையாவதும், ஆசீர்வாதமுமாகும்.***ஜனங்கள் விசுவாசத்தினால் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால்,அவர்கள் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் ஆசீர்வாதமாக இருப்பார்கள்.அவர்கள் தங்களுடைய எதிரிக்குப் பயப்படவேண்டிய எந்த காரண மும் இல்லை,ஏனெனில் இந்த நல்ல கர்த்தர் அவர்களை எகிப்பின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தவராகும். இவர்கள் புறஜாதிகளை ஒன்றன் பின் ஒன்றாகத் துரத்திவிடல் வேண்டும். (யோசுவா13:1-7. ).(7:25)விக்கிரகங்கள் தேவனுக்கு அருவருப்பானவை சாபத்தை கொண்டுவரும்.

8:1-6 ***அவர்களுடைய 40 வருட அலைச்சலில், இஸ்ரவேலர்கள் தங்கள் தேவைகள் யாவற்றையும் திருப்தியாகப் பெற்றுக் கொண்டார்கள்***. நீ புசித்துத் திருப்தியடைந்திருக்கையில், உன்தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த அந்த நல்ல தேசத்துக்காக அவரை ஸ்தோத்திரிக்கக்கடவாய். (8;10) கர்த்தருடைய வார்த்தையை நம்பாமலிருப்பதற்கு வேண்டிய அவசியம் எதுவுமிருக்கவில்லை, ஆனால் அவர்கள் கர்த்தரை நம்பாமல் இருந்தார்கள்.

*8:7-9* ***ஏறக்குறைய ஏதேன் தோட்டத்தைப் போலவே*** இஸ்ரவேல் மக்களுக்கான சகலதும், அவர்கள் தேவனுடைய வார்த்தையை நம்பியிருந்தால் கிடைத்திருக்கும்.கானான் மிகவும் அழகானதும்,செழிப்பானதுமான தேசம். அவர்களின் ஒவ்வொரு தேவையையும் அவர் சந்திப்பார்.(ரோமர்.8:28; பிலிப்.4:19).

*8:10-20* ***“மறந்திடாமல், ஞாபகமாக இருங்கள்”.*** கானான் தேசத்திற்குள் அவர்கள் இறுதியாகச் சென்றவுடன், அதன் அழகை அனுபவியுங்கள், இஸ்ரவேலர்கள் அதைத் தந்த கர்த்தரை மறக்கக்கூடாது, ஒன்பது தடவைகள், உபாகமத்தில், இஸ்ரவேலர்கள் கர்த்தரை மறந்துவிடக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. (4:9, 23, 31; 6:12; 8:11, 14, 19; 9:7; 25:19). கர்த்தரை மறந்தால், வாழ்க்கை முழுவதும் அவர்களுக்கு பிரச்சனைகள் தான் மிஞ்சும்.

*9:1-3* ***.இஸ்ரவேலர்களின் எதிரிகள்.”அவர்கள் பெரியவர்கள்,*** ஆனால் அவர் மகா பெரியவர்’. கானான் தேசத்திற்குள் வேவு பார்க்கப் புறப்படுவதை திரும்ப எண்ணிப் பாருங்கள். (எண. 13),மோசே இஸ்ரவேலர்களுக்கு , கானான் தேசத்திற்குள் நுழைந்தவுடன் மனிதரால் வெற்றி கொள்ள முடியாத இராணுத்தைச் சந்திப்பீர்கள் என்று கூறியிருந்தார். ஆனால் கர்த்தருடைய வாக்குறுதிகளுக்கு எதிராகச் செயற்படுவதற்கு மனிதவல்லமைகள் பிரயோசனமற்றவைகளாகும். (பிலிப் 4:13).கர்த்தருடைய பிள்ளைகளுடன் கர்த்தர் வரும்போது அவர்களுடைய எதிரிகள் இலகுவில் விழுந்து விடுவார்கள்.

*9:4-29* ***“நாங்கள் நல்லவர்கள் என்பதற்காகவல்ல, அவர்கள் கெட்டவர்கள் என்பதனால்”*** கானானியர்களைக் கர்த்தர் விரட்டிவிடுவார் என்பது அவர்கள் கெட்டவர்கள் என்பதற்காகவாகும்,, ஆனால் இஸ்ரவேலர்கள் தகுதியானவர்கள் என்பதற்காக வல்ல. (லேவி. 18:24-30;)எகிப்திலிருந்து புறப்பட்ட நாளிலிருந்து, இஸ்ரவேர்கள் கர்த்தர் கோபமடையும் வண்ணமாகவே நடந்து கொண்டார்கள். (9:8).அவர்கள் தங்கக் கன்றுக்குட்டியை வணங்கத் தொடங்கியதிலிருந்து கர்த்தர் அவர்கள்மேல் கடும்கோபமாகவிருந்தார். (யாத். 32). இஸ்ரவேலர்களின் பாவம் கர்த்தருடைய கண்களுக்கு முன்பாக அவமானமாகவே இருந்தது .அவர்களது விக்கிரக ஆராதனை மீது மோசே அதிக கோபம் கொண்டார். (9:13-24).40 நாட்கள் மலையில் மோசே அப்பம் புசியாமலும் தண்ணீர் குடிகவுமில்லை தேவ பிரசன்னத்துள் இருந்தார்.

*10:1-5, 10-11* ***.புதிய கற்பலகைகள். எழுதப்பட்டுப் பாதுகாப்பாகவைக்கப்பட்டது*** .மோசே கற்பலகைகளை உடைத்த பிற்பாடு, கர்த்தர் மோசேக்கு இன்னும் இரண்டு கற்பலகைகளை கொண்டுவரும்படி கூறினார்., அவற்றில் மீண்டும் பத்துக்கற்பனைகளை கர்த்தர் எழுதினார். (யாத் 34:1).உடன்படிக்கைப் பெட்டியில் அதனை வைத்தார்கள்.

*10:6-9*. ***ஆரோனின் மரணம்.லேவியருக்கான ஒரு கௌரவம்.*** மோசே ஆரோனின் மரணத்தை நினைவு கூர்ந்தார்., அவருடைய இடத்திற்கு அவரின் மகனாகிய எலியேசர் பிரதான ஆசாரி

யரானார், லேவி கோத்திரத்தார்,உடன்படிக்கைப் பெட்டியைச் சுமப்பதற்காக வேறு பிரிக்கப் பட்டார்கள். (18:1; எண். 18:1-6).

*10:12-22.**எல்லாவற்றையும் விட கர்த்தர் என்னத்தை விரும்புகிறார்.*** நான் இன்று உனக்குக் கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ளவேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன்தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். இது வெளிப்பிரகாரமான பரிசுத்தத்யைல்ல ,உள்ளான பரிசுத்தத்தைக் கர்த்தர் விரும்புகின்றார். இது ஒரு இருதயமாற்றம், மரியதையான வாழ்வு, அன்பு, கர்த்தருக்கு ஆராதனை செய்தல் என்பதாகும். (சங். 51:16-19). பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப்பிரியமானதல்ல. தேவனுக்கேற்கும்பலிகள் நொறுங்குண்டஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.

*11:1-7 **கீழ்ப்படிதலுக்கான முதலாவது அழைப்பு.பெற்றோருக்கு மட்டும்***. வயதான இஸ்ரவேலர்களுக்கு அன்பாகவும்,, கீழ்ப்படிதலாகவும் நடக்கும்படி கர்த்தர் வழிகாட்டினார்,அவர்கள், கர்த்தர் எகிப்திலிருந்து கானானுக்கு வரும்வரை கர்த்தர் செய்த சகல அற்புதங்களுக்கும் சாட்சியாகவிருக்கின்றார்கள். அவர்களுடைய பிள்ளைகள் இந்த அனுபவங்களை முழுவதுமாகப் பெற்றுக் கொள்ளவில்லை. இவர்கள் குறைவாகவே கனக்கு ஒப்புவிக்க வேண்டும். (11:2; லூக் 12:48).

*11:8-17 **கீழ்படிதலுக்கான இரண்டாவது அழைப்பு.*** ஜனங்களை நேசிப்பது போல கர்த்தர் இஸ்ரவேலர்களுடைய தேசத்தை நேசிக்கிறார். (11:12).அவர் தேசத்தை ஆசீர்வதிப்பேன் என்று கூறினார், இது, எப்படியோ, ஜனங்களின் கீழ்ப்படிதலிலேயே தங்கியுள்ளது..கீழ்ப்படியமறுப்பதும், அன்பு கூரமறுப்பதும்,தேசத்தின்மேலும், ஜனங்களின்மேலும் சாபத்தை வருவிக்கும். (11:16-17).

*11:18-21. **இதனை உங்கள் இருதயத்தில் சேர்த்துவையுங்கள்,*** இதனை உங்கள் பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். இஸ்ரவேலர்கள் தங்கள் பிள்ளைகளுடன் கர்த்தருடைய வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்ளல் வேண்டும்.தங்கள் இருதயத்தில் கர்த்தருடைய வார்த்தைகளைச் சேர்த்து வைப்பவர்களினாலே தான் இவ்வாறு செய்யமுடியும். (11:18-21).

*11:22-32 .**ஆசீர்வாதமா, நியாயத்தீர்ப்பா?*** இதுதான் உங்கள் அழைப்பு. நியாயப்பிரமாணத்தை எப்படிச் செயற்படுத்துகிறார்களோ, அந்த அளவுக்கே அவர்களின் அசீர்வாதமும் இருக்கும். (11:22-32).கிருபையும்,இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.நியாயப் பிரமாணம் ***“செய், நீ வாழ்வாய்”,*** கிருபை சொல்கிறது,” உங்களுக்கு வாழ்வு கொடுக்கப்பட்டிருக்கிறது, அதனால் நிறைவேற்றுங்கள்.

*12:1-28 **“அந்த பலிபீடத்தை இடித்து, எனக்காக ஒன்று கட்டுங்கள்”.*** இஸ்ரவேலர்கள் தேசத்திற்குள் நுழைந்தவுடன், இஸ்ரவேலர்கள் அங்கு காணப்படும் விக்கிரகங்களின் பலிபீடங்களை இடித்து தகர்க்க வேண்டும், (12:2-4).கர்த்தர் அவர்களின் இடத்தை தனக்குரிய ஆராதனை இடமாக தெரிந்து கொண்டார். (12:8-11).அது ஜனங்களின் குடியிருப்புக்குத் தூரமான இடம் என்று தெரிந்தும், கர்த்தர் அதனைத் தெரிந்து கொண்டார், அவ்வாறான புறம்போக்கான இடங்களிலும் மிருகங்கள் உணவுக்காக கொல்லப்படுவதை ஏற்பாடு செய்தார், (12:20-28). ஆனாலும் பலிக்காக மிருகங்கள் கொல்லப்படுவதற்கு அதற்குரிய இடங்களுக்கே கொண்டுவரல் வேண்டும்.குடும்பமாக ஆராதிக்கவும் சென்னார்.

*12:29-32* ***குறைத்தலோ, கூட்டுதலோ அனுமதிக்கப்படாது***. கர்த்தருடைய பிள்ளைகள் அந்நிய தேவர்களின் வழிகளில் சிக்கிக் கொள்ளாமலும், அந்த தேவர்களிடம் விசாரியாதபடியும் இருத்தல் வேண்டும். (12:29-32).நியாயப்பிரமாணத்தில் எதையும் குறைக்கவோ அல்லது கூட்டவோ கூடாது. (12:32; 4:2; வெளி. 22:18-19).இரத்தத்தை உண்ணுதல் நரபலியிடல் போன்றனவற்றை தேவன் வெறுக்கிறார்.

*13:1-18* ***கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தரை விட்டு விலக்கும்படிக்கு*** மூன்றுவிதமான செயற்பாடுகள் இடம்பெறும்.*1.பொய்த் தீர்க்கதரிசிகள் அற்புதங்கள் செய்தல் 2.குடும்பங்களுக்கு அசுத்தமான செயற்பாடுகள் செய்தல். 3.தேவர்களைச் சேவிக்கும்படி இரகசியமாய் உன்னை ஏவிவிடல்*,. அந்நிய தேவர்களை வணங்குபவர்களுக்கு மரணம்தான் தீர்ப்பாகும்.கர்த்தர் தன்னைமட்டுமே ஜனங்கள் ஆராதிக்கவும் வணங்கவும் வேண்டும் என்பதில் மிகவும் கருச னையாகவுள்ளார். (13:6-11; 17:2-5).மற்ற தெய்வங்களை வணங்கும்படி தூண்டுபவர்களும் அவர் கள் நகரங்களும் அழிக்கப்படவேண்டும். (13:12-18).

*14:1-15:23* ***பலவிதமான ஒழுங்குகள்.கர்த்தருடைய மக்கள் அவருடைய சொந்த ஜனங்கள்***. அவர்கள் அந்நிய மதத்தவர்களின் வழக்கங்களைச் செயற்படுத்தக்கடாது, செத்தவனுக்காகக் கீறிக்கொள்ளாமலும், உங்கள் கண்களுக்கு இடையிலே சவரம்பண்ணாமலும் இருப்பீர்களாக. *விசுவாசிகளுக்கான உணவுகள். (14:3-21).*தீட்டான மிருகங்களின் உணவுகள் பாகால் சமயத்தா ருடன் நெருங்கிய தொடர்பு கொண்டது,அல்லது உடல் ஆரோக்கியத்திற்கு உதவிகள் (.லேவி 11).

**கர்த்தருக்கு கொடுப்பதற்கான வழிகாட்டல்கள்**. *(14:22-29).*நியாயப்பிரமாணமானது விஷேசித்த மாதிரிகளை கொண்டுள்ளது, அதன் நோக்கத்தையும் தெளிவாகக் கூறுகின்றது.கர்த்தருக்குப் பயப்படும்படி அது போதிக்கின்றது. கர்த்தருக்கு கொடுத்தல் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும். (14:24) மகிழ்ச்சியைக் கொண்டுவரும். (14:26).வசனம் 28,29 தசமபாகத்தை லேவியருக்கும் பரதேசிக்கும் திக்கற்றவனுக்கும்,விதவைக்கும் குடுக்க சொல்லப்பட்டுலள்ளது.இன்றும் இதை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

**கடனும் வறுமையும்**. **(15:1-11). சபாத் காலத்து 7வருடத்தின் போது**, (லேவி 25:1-7) ஒரு இளைப்பாறுதலோ அல்லது கடன்தள்ளுபடி செய்தலோசெய்யப்படும். இது வறுமையான வர்களின் நன்மைக்கான ஏற்பாடாகும். சபாத் வருஷங்களில் ஜனங்கள் கடன்களைப் பெற்றுக் கொள்வது நல்லது. (15:9) அது மீண்டும் திருப்பக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை." ஆறு வருடங்களின் பின் அவனை விடுதலையாக்கு". *(15:12-18). எகிப்தின் அடிமைத் தனத்தை நினைத்துக் கொள், இஸ்ரவேலர்கள் ஆறுவருடத்தின் பின்பு அடிமைகளை விடுதலையாக்க வேண்டும் (* லேவி. 25:35-55).அவர்கள் புது வாழ்வு தொடங்குவதற்கு வேண்டிய பொருள் பண்ட மெல்லாம் கொடுத்தல் வேண்டும்.தொடர்ந்து தன்னுடைய எஜமானுடன் இருக்க விரும்பும் அடிமையின் காதில் ஓட்டை இடுதல் வேண்டும்.அடிமைகளைச் சிறப்பாபக நடத்துபவர்களுக்கு கர்த்தர் விஷேசித்த ஆசீர்வாதங்களை அனுப்புவதாக வாக்குறுதி செய்துள்ளார்.

**முதற்பிறந்த மிருகங்கள்.;** *(15:19-*23). உன் ஆடுமாடுகளில் தலையீற்றாகிய ஆணையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமாக்கக்கடவாய்; உன் மாட்டின் தலையீற்றை வேலை கொள்ளாமலும், உன் ஆட்டின் தலையீற்றை மயிர்கத்தரியாமலும் இருப்பாயாக.

**16:1-17 முன்று பிரதான பண்டிகைகள்.** வருடத்துக்கு ஒரு முறை இஸ்ரவேலர்கள் எகிப்தி லிருந்து அற்புதவிதமாகத் தப்பி வந்ததை நினைவு கூரும் முகமாக பண்டிகை கொண்டாடக் கவர்கள், **அதனை பஸ்கா என்று கூறுவார்கள்,** இது ஆட்டுக்குட்டியின் இரத்தம் பூசப்பட்ட வீடுகளைச் சங்கார தூதன் கடந்து சென்றதை நினைவு கூருதலாகும். (16:1-8; யாத்.12:1-28).பஸ்காவிற்குப் பின்பு ஏழு வாரங்கள் சென்ற பின்பு, புளிப்பில்லாப் பண்டிகை கொண்டா டப்படும்,இஸ்ரவேலர்கள் இதனை பென்தகோஸதே நாள் என்று கொண்டாடுகிறார்கள். அறுவடையின் பண்டிகை, வாரப்பண்டிகை, அல்லது முதற்கனியின் பண்டிகை என்று அழைப்பார்கள். (16:9-12; எண். 28:26).கூடாரப் பண்டிகை (16:13-15)சேர்ப்புக்காலப் பண்டிகை அல்லது இறுதி அறுவடை( **யாத் 23:16; 34:22),**அல்லது கர்த்தருடைய பண்டிகை(லேவி. 23:39 ) இது இஸ்ர வேலர்கள்,எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்டதை நினைவுகூருவதற்காக கொண்டாடப் படும். இந்த பண்டிகைகளின் போது இஸ்ரவேலர்கள் யாவரும் கர்த்தருக்கு முன்பாக சமூகம ளித்தல் வேண்டும். (16:16-17)

**16:18–18:14 பலவிதமான ஒழுங்கு முறைகள். *(17:2-7).***

*நீதிபதியும் நியாயமும்.(16:18-20).*நியாயாதிபதிகளையும் தலைவரையும் ஏற்படுத்துவாயாக; அவர்கள் நீதியுடன் ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்புச் செய்யக்கடவர்கள்.

தோப்பையும் சிலையையம் நிறுத்த வேண்டாம். *(16:21-22).*விக்கிரக ஆராதனைகள் பரிசுத்த தோப்புகள் உண்டாக்குவதும்.சிலைகளை உண்டாக்குவதும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. கர்த்தருக்கு நல்லதைக் கொடுப்பதில் நிச்சயப்படுத்தல். *(17:1).*பலியிடப்படுபவை பழுதற்றதாக இருத்தல் வேண்டும். கர்த்தர் பழுதுள்ளவைகளை ஏற்றுக் கொள்வதில்லை. *(17:2-7).*கர்த்தருக்கு விக்கிரக ஆராதனை அருவருப்பானது.இதனைச் செய்பவர்கள் கல்லெறிந்து கொலை செய்ய ப்படுவார்கள், குற்றவாளி என்று தீர்ப்பதற்கு இரண்டு சாட்சிகள் தேவை.
**முக்கிய பிரச்சனைகள் தீர்த்துவைத்தல்.** *(17:8-13).*இரண்டு குடும்பங்களுக்கிடையில் பிணக்குகள் ஏற்பட்டு, அவற்றிற்கு இணக்கம் காணப்படாமல் போகும் பட்சத்தில், அந்தப் பிரச்சனைகளை ஆவிக்குரிய தலைவர்களிடம் அல்லது நியாயாதிபதிகளிடம் கொண்டுவருதல் வேண்டும். (மத் 18:15-17).

**ராஜாக்களுக்கான சட்டம்***(17:14-20).*இஸ்ரவேலர்களுக்கு ராஜா தேவைப்படும் போது(1 சாமு. 8:5-22), அதற்கான கொள்கைகளையும்,தெரிவு செய்தல் பற்றியும், நடத்தைகள் பற்றியும் மோசே கூறியிருக்கிறார்., முதலாவது முக்கிய விடயம் அவர் ஒரு இஸ்ரவேலனாக இருத்தல் வேண்டும். (17:15).(17:18) அரசனாயிருப்பவர்களுக்கு தேவ தியானம் அவசியம்

**18:15-19** உன்தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக என்று மோசே கூறினார். இது கிறிஸ்துவை குறித்து கூறப்பட்டுள்ளது.
**18:20-25:16** .தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசனம் தவறும் பட்சத்தில் தீர்க்கதரிசி சாகவேண்டும். *(18:20-22).*கர்த்தருடைய வேறு நாமத்தில் தீர்க்கதரிசம் கூறினாலும், அல்லது அவருடைய தீர்க்கத ரிசனம் பிழைத்தாலும் அவர் கொல்லப்படல் வேண்டும்.

**அடைக்கலப்பட்டனங்கள்**. *(19:1-13).* திரும்பவுமாக ஆறு நகரங்கள் அடைக்கலப்பட்டனமாக அறிவிக்கப்படுகின்றது. (4:41-43; எண். 35:9-34;யோசு 20:1-9).

**எல்லைக்குறியை மாற்றாதிருப்பாயக**. *(19:14).* உன்தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தில் உன்கைவசமாயிருக்கும் காணியாட்சியிலே முன்னோர்கள் குறித்திரு க்கிற பிறனுடைய எல்லையை ஒற்றிப்போடாயாக.

**பொய்ச் சாட்சிக்கான தண்டனை**. *(19:15-21).*பொய்ச்சாட்சியிடுதல் ஒரு தவறான காரிய மாகும்.அப்படியான குற்றம் செய்பவர்கள் கொலை செய்யப்படல் வேண்டும்.

**உன்னுடைய பெயர் இந்தப்பட்டியலில்** இருக்குமாயின் நீ யுத்தத்தில் கலந்து கொள்ளத் தேவையில்லை. *(20:1-9).* புது வீட்டைக்கட்டி, அதைப் பிரதிஷ்டை பண்ணாதிருக்கிறவன், திராட்சத்தோட்டத்தை நாட்டி, அதை அநுபவியாதிருக்கிறவன், ஒரு பெண்ணைத்தனக் கு நியமித்துக்கொண்டு, அவளை விவாகம்பண்ணாதிருக்கிறவன், பயங்காளியும் திடன ற்றவனுமாயிருக்கிறவன், இப்படிப்பட்டவர்கள் யுத்தத்தில் கலந்து கொள்ளத் தேவையில்லை.

**மற்றத் தேசங்கள்.அழிக்கபடுமா, அல்லது ஒப்பந்தம்மா**? *(20:10-20).* நீ ஒருபட்டணத்தின் மேல்யுத்தம் பண்ணநெருங்கும் போது, அந்தப்பட்டணத்தாருக்குச் சமாதானம் கூறக்கடவாய். அவர்கள் உனக்குச் சமாதானமான உத்தரவு கொடுத்து, வாசலைத் திறந்தால், அதிலுள்ள ஜனங்கள் எல்லாரும் உனக்குப்பகுதி கட்டுகிறவர்களாகி,உனக்கு ஊழியஞ் செய்யக்கட வர்கள்.அவர்கள் உன்னோடே சமாதானப்படாமல், உன்னோடே யுத்தம் பண்ணுவார்களானால், நீ அதை முற்றிக்கைபோட்டு, உன் தேவனாகிய கர்த்தர் அதை உன்கையில் ஒப்புக் கொடுக்கும் போது, அதிலுள்ள புருஷர்கள் எல்லாரையும் பட்டயக்கருக்கினால் வெட்டி,ஸ்திரீகளையும் குழந்தைகளையும் மிருகஜீவன்களையும் மாத்திரம் உயிரோடே வைத்து, பட்டணத்திலுள்ள எல்லாவற்றையும் கொள்ளையிட்டு, உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு ஒப்புக்கொடுத்த உன்சத்துருக்களின் கொள்ளைப்பொருளை அனுபவிப்பாயாக.

**தெரியாத கொலைக்கான பாவநிவாரணம்**.*(21:1-9).* கொலை செய்யப்பட்டுக்கிடக்கிற ஒருவனை வெளியிலேகண்டு, அவனைக் கொன்றவன் இன்னான் என்று தெரியாதிருந்தால், கொலை செய்யப்பட்டவனுக்குச் சமீபமான பட்டணத்து மூப்பர், வேலையில் பண்படாததும் நுகத்தடியில் பிணைக்கப்படாததுமான ஒரு கிடாரியைப்பிடித்து, உழுது விதையாத தரிசானபள்ளத்தாக்கிலே அதைக் கொண்டுபோய், அந்தப் பள்ளத்தாக்கிலே அதின் தலையை வெட்டிப் போடக்கடவர்கள். உன்தேவனாகிய கர்த்தர் தமக்கு ஆராதனை செய்யவும் கர்த்தருடைய நாமத்திலே ஆசீர்வதிக்கவும் லேவியின் குமாரராகிய ஆசாரிய ரைத் தெரிந்து கொண்டபடியால்,அவர்களும் அத்தருணத்தில் வந்திருக்கவேண்டும்; அவர்கள் வாக்கின் படியே சகல வழக்கும் சகல காயச்சேதமும் தீர்க்கப்படவேண்டும். கொலைசெய்யப்ப ட்டவனுக்குச் சமீபமானபட்டணத்தின் மூப்பர் எல்லாரும் பள்ளத்தாக்கிலே தலை வெட்டப்பட்ட கிடாரியின் மேல் தங்கள் கைகளைக்கழுவி: எங்கள் கைகள் அந்த இரத்தத்தைச் சிந்தினதும் இல்லை, எங்கள்கண்கள் அதைக் கண்டதும் இல்லை; கர்த்தாவே, நீர்மீட்டுக் கொண்ட உமது ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் குற்றமில்லாத இரத்தப் பழியைச் சுமத்தாமல், உமது ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் கிருபையுள்ளவராயிரும் என்று சொல்வார்களாக; அப்பொழுது இரத்தப்பழி அவர்களுக்கு நிவிர்த்தியாகும். இப்படிக் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதை நீ செய்வாயாகில், குற்றமில்லாத இரத்தப் பழியை உன் நடுவிலிருந்து விலக்கிப்போடுவாய்.

**சிறையிருப்பில் உள்ள பெண்ணைத் திருமணம் செய்தல்**. *(21:10-14)* இஸ்ரவேலின் போர்வீரன் சிறைப்பட்ட பெண்ணைத்திருமணம் செய்ய முடியும்.ஆனால் குறிப்பிட்ட சில ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**கானானியபெண்கள்** அவர்களுடைய கணவன்மாருடனும், பிள்ளைகளுடனும் கொல்லப்படல் வேண்டும். (20:16-17).

**அன்பில்லாத மனைவியின் மகன்***(21:15-17).* இரண்டு மனைவிகளையுடைய ஒருவன், ஒருத்தி யின் மேல்விருப்பாயும் மற்றவள்மேல் வெறுப்பாயும் இருக்க, இருவரும் அவனுக்குப் பிள்ளை களைப் பெற்றார்களேயாகில், முதற்பிறந்தவன் வெறுக்கப்பட்டவளின் புத்திரனானாலும், தகப்பன் தனக்கு உண்டான ஆஸ்தியைத் தன் பிள்ளைகளுக்குப் பங்கிடும் நாளில், வெறுக்கப்பட்டவளிடத்தில் பிறந்த முதற் பேறானவனுக்கு சேஷ்டபுத்திர சுதந்தரத்தைக் கொடுக்க வேண்டுமேயல்லாமல், விரும்பப்பட்டவளிடத்தில் பிறந்தவனுக்குக் கொடுக்கலாகாது. வெறுக்கப்பட்டவளிடத்தில் பிறந்தவனை சேஷ்டபுத்திரனாக அங்கிகரித்து, தனக்கு உண்டான ஆஸ்திகளிலெல்லாம் இரண்டு பங்கை அவனுக்குக் கொடுக்க வேண்டும்; அவன் தன் தகப்பனுடைய முதற்பலன், சேஷ்டபுத்திர சுதந்தரம் அவனுக்கே உரியது. பல திருமணம் செய்வது கர்த்தருடைய திட்ட மல்ல.

**கீழ்ப்படியாத மகனின் மரணம்.** *(21:18-23).* ஒருமகன் தாயயையும் தகப்பனையும் கௌரவிக்கா மல் இருந்தால்,தொடர்ந்து கிளர்ச்சி செய்து கொண்டிருபாராயின், அவன் கல்லெறிந்து கொல் லப்படக்கடவன்.

அயலவர்களின் தொலைந்ததும் காணாமல் போனதும்*(22:1-4).*அயலவர்களின் மிருகங்கள், அல்லது பொருட்கள் கானாமல் போனதைக் கண்டுபிடித்தாயாகில் அதை அயலகத்தாரிடம் திருப்பி ஒப்படைத்தல் வேண்டும்.ஆண்களுக்கும்,பெண்களுக்கும் உரிய உடுப்பை அணிய வேண்டும். *(22:5).* புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது, ஸ்திரீகளின் உடைகளைப் புருஷர்தரிக்கலாகாது; அப்படிச் செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்.

**ஒரு குருவிக் கூடு***(22:67).* வழியருகே ஒருமரத்திலாவது தரையிலாவது குஞ்சுகளாயினும் முட்டைகளாயினுமுள்ள ஒரு குருவிக்கூடு உனக்குத் தென்படும்போது, தாயானது குஞ்சுகளின் மேலாவது முட்டைகளின் மேலாவது அடைகாத்துக்கொண்டிருந்தால், நீ குஞ்சுகளோடே தாயையும் பிடிக்கலாகாது. தாயைப் போகவிட்டு, குஞ்சுகளை மாத்திரம் எடுத்துக் கொள்ளலாம்; அப்பொழுது நீ நன்றாயிருப்பாய்; உன் நாட்களும் நீடித்திருக்கும்.

**வீடு கட்டும்போது பாதுகாப்பு முக்கியம்**. *(22:8).* நீ புதுவீட்டைக்கட்டினால், ஒருவன் உன்மெத்தையிலிருந்து விழுகிறதினாலே, நீ இரத்தப்பழியை உன்வீட்டின் மேல் சுமத்திக் கொள்ளாதபடிக்கு, அதற்குக் கைப்பிடி சுவரைக்கட்டவேண்டும்.*(22:9-12).*உன் திராட்சத் தோட்டத்திலே பற்பல விதமான விதையை விதைக்காயாக இப்படிச் செய்தால் நீ விதைத்த வைகளின் பயிரையும், திராட்சத்தோட்டத்தின் பலனையும் தீட்டுப்படுத்துவாய். மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக. ஆட்டுமயிரும் பஞ்சுநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்திக்கொள்ளாயாக.

***மனைவிமீது பொய்க் குற்றம்*** *(22:13-21).*ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணின ஒருவன் அவளிடத்தில் பிரவேசித்த பின்பு அவளை வெறுத்து: நான் இந்த ஸ்திரீயை விவாகம்பண்ணி, அவளிடத்தில் சேர்ந்த போது கன்னிமையைக் காணவில்லை என்று அவள் மேல் ஆவலாதி யான குற்றங்களைச்சாட்டி, அவளுக்கு அவதூறு உண்டாக்கினால்; அந்த ஸ்திரீயின் தகப்பனும்

அவள் தாயும் அவளுடைய கன்னிமையின் அடையாளத்தைப் பட்டணத்து வாசலிலுள்ள மூப்ப ரிடத்தில் கொண்டு வரக்கடவர்கள்

**பாலியல் சம்பந்தமான பாவம்***(22:22-30).* புருஷனுக்கு விவாகம் பண்ணப்பட்ட ஸ்திரீயோடே ஒருவன் சயனிக்கக் கண்டுபிடிக்கப்பட்டால், அந்த ஸ்திரீயோடே சயனித்த மனிதனும் அந்த ஸ்திரீயும் இருவரும் சாகவேண்டும்; இப்படியே தீமையை இஸ்ரவேலிலிருந்து விலக்கக்கடவாய்.

**பரிசுத்த ஸ்தலத்திற்குள் வருவதற்கான தடை***(23:1-8).* விதையடிக்கப்பட்டவனும், கோசமறுபட்டவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. வேசிப்பிள்ளையும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது; அவனுக்குப் பத்தாம்தலைமுறையானவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. அம்மோனியனும் மோவாபியனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது; பத்தாம் தலைமுறையிலும் என்றைக்கும் அவர்கள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே, அவர்கள் அப்பத்தோடும் தண்ணீரோடும் உங்களுக்கு எதிர்கொண்டு வராததினிமித்தமும், உன்னைச் சபிக்கும்படியாய் மெசொப்பொ த்தாமியாவின் ஊராகியபே த்தோரிலிருந்த பேயோரின் குமாரன் பிலேயாமுக்குக் கூலிபேசி அவனை அழைப்பித்ததினிமித்தமும் இப்படிச் செய்ய வேண்டும்.

**யுத்தகளத்தில் பரிசுத்தம்***(23:9-14).* நீ படையெடுத்து உன்சத்துருக்களுக்கு விரோதமாய்ப் புறப்படும் போது, தீதானகாரியங்கள் எல்லாவற்றிற்கும் விலகியிருப்பாயாக.இராக்காலத்தில் சம்பவித்த தீட்டினாலே அசுத்தமாயிருக்கிற ஒருவன் உங்களிலிருந்தால், அவன்பாளயத்திற்கு வெளியே போய், பாளயத்திற்குள் வராமல், சாயங்காலத்திலே ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, சூரியன் அஸ்தமிக்கும் போது பாளயத்திற்குள்வரக்கடவன்.

**ஓடிப் போன அடிமை***(23:15-16).* தன் எஜமானுக்குத் தப்பி உன்னிடத்தில் வந்த வேலைக்காரனை அவனுடைய எஜமான்கையில் ஒப்புக்கொடாயாக. அவன் உனக்கு இருக்கிற உன் வாசல்கள் ஒன்றிலே தனக்குச் சம்மதியான இடத்தைத் தெரிந்துகொண்டு, அதிலேஉன்னுடனே இருப்பா னாக; அவனை ஒடுக்கவேண்டாம்.

**வேசித்தனம்.** *(23:17-18).* இஸ்ரவேலின் குமாரத்திகளில் ஒருத்தியும் வேசியாயிருக்கக்கூடாது; இஸ்ரவேலின் குமாரரில் ஒருவனும் ஆண்புணர்ச்சிக்காரனாயிருக்கக் கூடாது. வேசிப்ப ணயத்தையும், நாயின் கிரயத்தையும் எந்தப் பொருத்தனையினாலாகிலும் உன் தேவனா கிய கர்த்தரின் ஆலயத்திலே கொண்டுவராயாக; அவைகள் இரண்டும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள்

**வட்டியில்லா கடன்**. *(23:19-20)* கடனாகக் கொடுக்கிற பணத்துக்கும் ஆகாரத்துக்கும், கடனாகக் கொடுக்கிற வேறே எந்தப் பொருளுக்கும், உன் சகோதரன் கையில் வட்டி வாங்காயாக. அந்நியன் கையில் நீ வட்டி வாங்கலாம்; நீ சுதந்தரிக்கப் போகிறதேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் நீகையிடும் வேலையிலெல்லாம் உன்னை ஆசீர்வதிக்கும்படி உன் சகோதரன் கையிலே வட்டிவாங்காயாக.

**பொருத்தனை செலுத்து***(23:21-23)* .நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணியி ருந்தால், அதைச் செலுத்தத் தாமதஞ் செய்யாதே; உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன் கையில் கேட்பார்; அது உனக்குப் பாவமாகும்.

**அயலவன் பழம்.(23:24-25).**நீ பிறனுடைய திராட்சத் தோட்டத்தில் பிரவேசித்தால், உன் ஆசைதீர திராட்சப்பழங்களைத் திருப்தியாகப் புசிக்கலாம்; உன் கூடையிலே ஒன்றும் எடுத்துக் கொண்டு

போகக்கூடாது. பிறனுடைய விளைச்சலில் பிரவேசித்தால், உன் கையினால் கதிர்களைக் கொய்யலாம்; நீ அந்த விளைச்சலில் அரிவாளை இடலாகாது.

**விவாக இரத்தும் மறுதிருமணமும்.** *(24:1-4).*ஒருவன் ஒருஸ்திரீயை விவாகம்பண்ணிக் கொண்ட பின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள் மேல் பிரியமற்ற வனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத்தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடலாம். அவள் அவனுடைய வீட்டை விட்டுப் போன பின்பு, வேறொருவனுக்கு மனைவியாகலாம். அந்த இரண்டாம் புருஷனும் அவளை வெறுத்து, தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பி விட்டாலும், அவளை விவாகம் பண்ணின அந்த இரண்டாம் புருஷன் இறந்து போனாலும், அவள் தீட்டுப்பட்ட படியினால், அவளைத் தள்ளி விட்ட அவளுடைய முந்தின புருஷன் திரும்பவும் அவளை மனைவியாகச் சேர்த்துக்கொள்ளக்கூடாது; அது கர்த்தருக்கு முன்பாக அருவருப்பானது; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தின்மேல் பாவம்வரப் பண்ணாயாக. (மல்கியா 2:16 மத். 19:1-12).

**விவாகத்தின்பின்பு ஒருவருடம்**. *(24:5).* ஒருவன் ஒரு பெண்ணைப் புதிதாய் விவாகம் பண்ணியிருந்தால், அவன் யுத்தத்திற்குப் புறப்படவேண்டாம்; அவன்மேல்யாதொரு வேலையும் சுமத்த வேண்டாம்; அவன் ஒரு வருஷபரியந்தம் தன் வீட்டில் தன் இஷ்டப்படியிருந்து, தான் விவாகம்பண்ணின ஸ்திரீயைச் சந்தோஷப் படுத்துவானாக.

**24:6 திரிகையின் அடிக்கல்லையாவது அதின் மேற்கல்லையாவது ஒருவரும் அடகாக வாங்கக்கூடாது**; அது ஜீவனை அடகுவாங்குவதுபோலாகும்.

24:7 தன் சகோதரராகிய இஸ்ரவேல்புத்திரரில் ஒருவனைத்த கடத்தி, அதினால்ஆதாயந்தேடி, அவனை விற்றுப்போட்ட ஒருவன் அகப்பட்டால், அந்தத் திருடன்கொலை செய்யப்படவேண்டும்; இப்படியே தீமையை உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய்.
24:8, 9 குஷ்டரோகத்தைக்குறித்து லேவியராகிய ஆசாரியர்உங்களுக்குப் போதிக்கும் யாவையும் கவனித்துச் செய்யும்படிமிகவும் எச்சரிக்கையாயிருங்கள்; நான் அவர்களுக்குக் கட்டளையி ட்டபடியே செய்யக்கவனமாயிருப்பீர்களாக. நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டுவருகிற வழியிலே உங்கள் தேவனாகிய கர்த்தர் மிரியாமுக்குச் செய்ததை நினைத்துக்கொள்ளுங்கள்.

24:10–13 பிறனுக்கு நீ ஏதாகிலும் கடனாகக் கொடுத்தால், அவன் கொடுக்கும் அடகை வாங்க நீ அவன் வீட்டிற்குள் பிரவேசிக்க வேண்டாம். வெளியே நிற்பாயாக; கடன் வாங்கினவன் அந்த அடகைவெளியே உன்னிடத்தில் கொண்டுவருவானாக. அவன் தரித்திரனானால், நீ அவன் அடகை வைத்துக் கொண்டு நித்திரை செய்யாமல், அவன் தன் வஸ்திரத்தைப் போட்டுப்படுத்துக் கொண்டு உன்னை ஆசீர்வதிக்கும்படி, பொழுது போகும் போது, திரும்ப அந்த அடகை அவனுக்குக் கொடுத்துவிடவேண்டும்; அது உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உனக்கு நீதியாயிருக்கும்.
24:14, 15. உன் சகோதரரிலும், உன் தேசத்தின் வாசல்களிலுள்ள அந்நியரிலும் ஏழையும் எளிமையுமான கூலிக்காரனைஒடுக்காயாக. அவன் வேலை செய்த நாளில் தானே, பொழுது போகுமுன்னே, அவன்கூலியை அவனுக்குக் கொடுத்துவிட வேண்டும்; அவன் ஏழையும் அதின் மேல் ஆவலுமாயிருக்கிறான்; அதைக் கொடாவிட்டால் அவன் உன்னைக் குறித்துக் கர்த்தரை நோக்கி முறையிடுவான்; அதுஉனக்குப் பாவமாயிருக்கும்.

24:16.பிள்ளைகளுக்காகப் பிதாக்களும், பிதாக்களுக்காகப் பிள்ளைகளும் கொலை செய்யப்பட வேண்டாம்; அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவன் கொலை செய்யப்படவேண்டும்.
24:17–22 நீ அந்நியனுடைய நியாயத்தையும் திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும் புரட்டாமலும், விதவையின் வஸ்திரத்தை அடகாக வாங்காமலும் இருந்து, நீ எகிப்திலே அடிமையாயிருந்ததையும்,உன்தேவனாகிய கர்த்தர் உன்னை அங்கேயிருந்து மீட்டுக் கொண்டு வந்ததையும் நினைப்பாயாக; ஆகையால்,இப்படிச் செய்யும்படி நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். நீ உன்பயிரை அறுக்கையில் உன்வயலிலே ஒரு அரிக்கட்டை மறதியாய் வைத்து வந்தாயானால், அதை எடுத்துவரும்படி திரும்பிப் போகவேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர் உன் கைப்பிரயாசத்திலெல்லாம் உன்னைஆசீர்வதிக்கும்படி, அதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடுவாயாக. நீ உன் ஒலிவ மரத்தை உதிர்த்து விட்ட பின்பு, கொம்பிலே தப்பியிருக்கிறதைப் பறிக்கும்படி திரும்பிப்போக வேண்டாம்; அதைப் பரதேசிக்கும் திக்கற்றபிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடுவாயாக; நீ உன் திராட்சப்பழங்களை அறுத்த பின்பு, மறுபடியும் அதை அறுக்கத் திரும்பிப் போகவேண்டாம்; அதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டு விடுவாயாக. நீ எகிப்திலே அடிமையாயிருந்ததை நினைப்பாயாக; ஆகையால், இப்படிச் செய்யும்படிநான் உனக்குக்கட்டளையிடுகிறேன்.

**25:1–3 குற்றம் செய்தவர் குற்றவாளி என்று முடிவு செய்யப்பட்ட பின்பு** அவர் அடிகள் கொடுக்கும்படி தீர்ப்புக் கூறப்பட்டார், அவர் 40 அடிகளுக்குமேல் அடிக்க கூடாது. யூதர்கள் பொதுவாக 39 அடிகள் மட்டும் தான் அடிக்கப்படுவார்கள். 2கொரி 11:24

***25:4 போரடிக்கிறமாட்டை வாய்கட்டாயாக.*** போரடிக்கிற மாட்டை வாய்கட்டாயாக என்று மோசேயின் பிரமாணத்திலே எழுதியிருக்கிறதே. தேவன் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ? நமக்காகத்தான் இதைச்சொல்லுகிறாரோ? உழுகிறவன் நம்பிக்கையோடே உழவும், போரடிக்கிறவன் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற நம்பிக்கையோடே போரடிக்கவும் வேண்டியதே, ஆகையால், அது நமக்காகவே எழுதியிருக்கிறது. என்று பரிசுத்த பவுலும் கூறியுள்ளார்(1 கொரி 9:9–1)

*25:5–10.***சகோதரர் ஒன்றாய்க் குடியிருக்கும்போது, அவர்களில் ஒருவன் புத்திரசந்தானமில்லாமல்** மரித்தால், மரித்தவனுடைய மனைவி புறத்திலிருக்கிற அந்நியனுக்கு மனைவியாகக்கூடாது; அவளுடைய புருஷனின் சகோதரன் அவளைத் தனக்கு மனைவியாகக் கொண்டு, அவளிடத்தில் சேர்ந்து, புருஷனுடைய சகோதரன் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக்கடவன். மரித்த சகோதரனுடைய பேர் இஸ்ரவேலில் அற்றுப் போகாத படிக்கு, அவன் பேரை அவள் பெறும் தலைப் பிள்ளைக்குத் தரிக்க வேண்டும். அவன் தன் சகோதரனுடைய மனைவியை விவாகம்பண்ண மனதில்லாதிருந்தால், அவன் சகோதரனுடைய மனைவி வாசலில் கூடிய மூப்பரிடத்துக்குப் போய்: என்புருஷனுடைய சகோதரன் தன் சகோதர னுடைய பேரை இஸ்ரவேலில் நிலைக்கப் பண்ணமாட்டேன் என்கிறான்; புருஷனுடைய சகோதரன் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய அவன் மனதில்லாதிருக்கிறான் என்று சொல்வாளாக. அப்பொழுது அந்தப் பட்டணத்து மூப்பர் அவனை அழைப்பித்து அவனோடே பேசியும், அவன் அவளை விவாகம் பண்ணிக் கொள்ள எனக்குச் சம்மதமில்லை என்று பிடிவாதமாய்ச் சொன்னால், அவன் சகோதரனுடைய மனைவி மூப்பரின் கண்களுக்கு முன்பாக

அவனிடத்தில்வந்து, அவன் காலிலிருக்கிற பாதரட்சையைக் கழற்றி, அவன் முகத்திலே துப்பி, தன் சகோதரன் வீட்டைக்கட்டாதவனுக்கு இப்படியே செய்யப்பட வேண்டும் என்று சொல்லக்கடவள். இஸ்ரவேலில் அப்படிப்பட்டவன் வீடு, பாதரட்சை கழற்றிப் போடப்பட்டவன் வீடு என்னப்படும்.

*25:11, 12* ***புருஷர் ஒருவரோடொருவர் சண்டை பண்ணிக்கொண்டிருக்கையில்***, ஒருவனுடைய மனைவி தன் புருஷனை அடிக்கிறவன் கைக்கு அவனைத் தப்புவிக்கும்படி வந்து, தன் கையை நீட்டி, அடிக்கிறவன் மானத்தைப் பிடித்ததுண்டானால், அவளுடைய கையைத் தறிக்கக்கடவாய்; உன் கண் அவளுக்கு இரங்க வேண்டாம்.

**25:13–16 உன் பையிலே பெரிதும் சிறிதுமான பல வித நிறை கற்களை வைத்திருக்க வேண்டாம்.** உன்வீட்டில் பெரிதும் சிறிதுமான பல விதபடிகளையும் வைத்திருக்கவேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் உன் நாட்கள் நீடித்திருக்கும்படி, குறையற்ற சுமுத்திரையான நிறைகல்லும், குறையற்ற சுமுத்திரையானபடியும் உன்னிடத்தில் இருக்கவேண்டும்.

*25:17–19* ***நீ இளைத்து விடாய்த்திருக்கையில்***, பின்வருகிற உன் பாளயத்திலுள்ள பலவீனரை யெல்லாம் வெட்டினான் என்பதை நினைத் திரு. (யாத் . 17:8–16) உன் தேவனாகிய கர்த்தர் நீ சுதந்தரித்துக் கொள்ள உனக்குக் கொடுக்கும் தேசத்தின் சுற்றுப்புறத்தாராகிய உன்னுடைய சத்துருக்களையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் விலக்கி, உன்னை இளைப்பாறப்பண்ணும் போது, நீ அமலேக்கின் பேரைவானத்தின் கீழ் இராதபடிக்கு அழியப்பண்ணக்கடவாய்; இதை மறக்க வேண்டாம்.

*26:1–11* **ஜனங்கள் கானானில் சென்றடைந்தவுடன்** , அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்குச்சென்று, தங்கள் விளைச்சலில் கிடைத்த முதற்பலனை ஆசாரியனிடத்திற்கு கொண்டுவந்து சந்தோசத்துடன் கொடுக்கடவன். கர்த்தர் செய்த நன்மைகளையெல்லாம் சொல்லக்கடவர்கள். எகிப்திலிருந்து அற்புதவிதமாக வந்து சேர்ந்ததையும் சொல்லக்கடவன் .கர்த்தருடைய வல்லமையான இரட்சிப்பைப் பற்றியும் அறிக்கையிடக்கடவன்.பாலும்தேனும் ஓடுகிற நாட்டைக் கர்த்தர் தந்ததைப்பற்றி சந்தோசமாக இருக்கக் கடவன்.

*26:12–15* **தசமபாகம் செலுத்தும்** வருஷமாகிய மூன்றாம் வருஷத்திலே, நீ உன்வரத்திலெல்லாம் பத்தில் ஒன்றை எடுத்து, லேவியனும் பரதேசியும் திக்கற்றபிள்ளையும் விதவையும் உன்வாசல்களில் புசித்துத் திருப்தியாகும்படி அவர்களுக்குக் கொடுத்துத் தீர்ந்த பின்பு, நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் போய் அவரைநோக்கி: தேவரீர் எனக்குக் கொடுத்த எல்லாக் கட்டளைகளின்படியும், நான் பரிசுத்தமான பொருள்களை என் வீட்டிலிருந்து எடுத்து வந்து, லேவியனுக்கும் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் கொடுத்தேன்; உம்முடைய கட்டளைகளில்ஒன்றையும் நான் மீறவும் இல்லை மறக்கவும் இல்லை.

**26:16–19உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளல்**. இந்தக் கட்டளைகளின்படியும் நியாயங்களின்படியும் நீ செய்யும் பொருட்டு, இன்று உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிடுகிறார்; ஆகையால் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவைகளைக்காத்து நடக்கக்கடவாய். கர்த்தர் எனக்கு தேவனாயிருப்பார் என்றும், நான் அவர் வழிகளில் நடந்து, அவர் கட்டளைகளையும் அவர் கற்பனைகளையும் அவர் நியாயங்களையும்

கைக்கொண்டு, அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படிவேன் என்றும் நீ இன்று அவருக்கு வாக்குக்கொடுத்தாய். கர்த்தரும் உனக்கு வாக்குக்கொடுத்து உனக்குச் சொல்லியிருக்கிறபடி: நீ என்னுடைய கட்டளைகளையெல்லாம் கைக்கொண்டால், எனக்குச் சொந்த ஜனமாயிருப்பாய் என்றும், நான் உண்டு பண்ணின எல்லா ஜாதிகளைப் பார்க்கிலும், புகழ்ச்சியிலும் கீர்த்தியிலும் மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும்படிசெய்வேன் என்றும், நான் சொன்னபடியே, நீ உன் தேவனாகிய கர்த்தரான எனக்குப் பரிசுத்த ஜனமாயிருப்பாய் என்றும், அவர் இன்று உனக்குச் சொல்லுகிறார் என்றான்.

**3வது உபதேசம் (27–30)**

***27:1-26 சாபமும் ஆசீர்வாதமும்***.

இஸ்ரவேலர்கள் யோர்தானைக் கடந்து செல்லும் நாளில், இஸ்ரவேலர்கள் நினைவுத் தூபியைக் கட்டல் வேண்டும், அதில் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை பொறித்தல் வேண்டும், பலிபீடத்தையும் கட்டுதல் வேண்டும். (27:1-8). வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் கர்த்தரை ஆராதிப்பதும், அவரது வார்த்தைக்கு கீழ்படிந்து நடப்பதுவுமே அவர்களின் முக்கிய கடமையாகும்.கானான் தேசத்தில் ஆசீர்வாதமும், சாபமும் இடம்பெறும் என்பதற்கான விளக்கங்களை மோசே கூறினார். (27:9-26).உடன்படிக்கைப் பெட்டியுடனும், ஆசாரியர்களுடனும், பள்ளத்தாக்கிலே,அரைவாசிக் கோத்திரங்கள் ***கெரிசீம் மலையில் நின்றார்கள்***,மிகுதி அரைவாசிக் கோத்திரமும் ***ஏபால் மலையிலே நின்றார்கள்***. கெர்சீம் மலையில் நிற்பவர்கள் கீழ்ப்படிபவர்களுக்கு ஏற்படும் ஆசீர்வாதங்களைக் கூறினார்கள். ஏபால் மலையில் நிற்பவர்கள் கீழ்ப்படியாதவர்களுக்கு ஏற்படும் சாபத்தை சிறிய கோரேசா **(chorus)** ஆகப்பாடினார்கள்.யோசுவா,மோசேயின் வெற்றியாளர், இந்த ஊர்வலத்தை நடத்திச் சென்றார். (யோசு 8:30-35).

**28:1-14 கீழ்படிதலுக்கான நிறைவான ஆசீர்வாதம்.** *யுத்தத்தில் வெற்றி,ஆசீர்வாதம்,உடற்சுகம், ஆவிக்குரிய நன்மைகள், உலகளாவிய மதிப்பு*, என்பன கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தால் கிடைக்கும் என்று கர்த்தர் உறுதியாக கூறுயுள்ளார்.

**28:15-68 கீழ்ப்படியாமை அழிவைக் கொண்டுவரும். அதுமட்டுமல்லாமல், கீழ்ப்படியாமை சாபத்தையும் கொண்டுவரும்.**நோய்கள்,வரட்சிகள்,யுத்தத்தில் தோல்விகள்.தோல்விகளோடு வேதனைகளும் சேர்ந்து வரும் கைநீட்டிச் செய்யும் காரியங்கள் எல்லாம் திருமணம் உட்பட தோல்வியில் முடியும். (28:30), உனக்குத் தெரியாத பாஷையைப் பேசுகிறதுமான ஜாதியை வெகு தூரத்திலுள்ள பூமியின் கடையாந்தரத்திலிருந்து கர்த்தர் உன் மேல் கழுகு பறக்கும் வேகமாய் வரப்பண்ணுவார். உன் தேசமெங்கும் நீ நம்பியிருக்கும் உயரமும் அரணிப்புமான உன் மதில்கள் விழுமளவும், அவன் உன் வாசல்களிலெங்கும் உன்னை முற்றிகைப் போடுவான்; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன்னுடைய தேசமெங்குமுள்ள உன்னுடைய வாசல்கள் தோறும் உன்னை முற்றிகைப் போடுவான்.

**29:1-8 கர்த்தருடைய நம்பிக்கையும் ஜனத்தினுடைய சபலமும். மீள்பார்வை.** எகிப்திலிருந்து மீண்டு வந்தபோது ஏற்பட்ட சோதனைகளில் எல்லாம் கர்த்தர் அவர்களை அற்புதமாக மீட்ட சம்பவங்கள் யாவற்றையும் மோசே திரும்பவுமாய் அவர்களுக்கு ஞாபகப்படுத்தினார்.கர்த்தர் நன்றியுள்ளவராக இருந்த போதிலும், இஸ்ரவேலர்கள் நன்றியில்லாதவர்களாய் இருந்தார்கள்.

**29:9-29 . அர்ப்பணிப்புக்கான ஒரு அழைப்பு.** திரும்பவுமாக கர்த்தர் ஜனங்களுக்கு , தன்னுடைய உடன்படிக்கைக்கு கீழ்ப்படிந்து நடக்கும் படிக்கும்,கர்த்தரை தங்கள் தேவனாக ஏற்று நடக்கும் படிக்கும் அழைப்பு விடுக்கின்றார். அவர்கள் உடன்படிக்கையை உடைத்துவிடுவார்களானால், கூறப்படும் சகல சாபங்களும் அவர்கள்மேல் வந்துசேரும் என்றும் எச்சரிக்கின்றார். சாபத்தின் முடிவ வாக்குப்பண்ணப்பட்ட ***தேசத்தையும் இழந்துவிடுவார்கள்.***

**30:1-10 "நாம் மனம்திரும்புவோமானால்,** கர்த்தர் மீண்டும் நம்மைச் சேர்த்துக் கொள்வார்.தேசத்தை இழந்தால், மீண்டும் மனம்திரும்பி வந்தால், கர்த்தர் திரும்பவுமாய் சேர்த்துக் கொண்டு தேசத்தை உனக்குத் தருவார்.

**30:11-20 "ஜீவனா மரணமா? இது உங்களின் கைகளிலே.".** நியாயப்பிரமாணம், இஸ்ரவேலர்களின் சோதனையாகும் என்று தெளிவாகவுள்ளது. அது அவர்களுயை இருதயத்திற்கும், வாய்க்கும் அண்மித்ததாக இருக்கின்றது. கர்த்தர் ஞானத்திலும், வல்லமையிலும் அளவிட முடியாதவர்,அவர் தம்முடைய ஜனங்களுடன் நேரடியாக தொடர்பில் சாதாரணமாக இருக்க விரும்புகிறார். கர்த்தருக்கு கீழ்ப்படிந்தால் ஆசிர்வாத்தையும் ஜீவனையும் பெற்றுக் கொள்ள முடியும். அவர்கள் கர்த்ரை விட்டு விக்கிரகங்கள் பக்கமாகத் திரும்பினால், சாபமும் மரணமும் தான் ஏற்படும்.இது உங்களின் கைகளில் தான் உள்ளது.

**மோசேயின் கடைசி நாட்கள்.(31–34)**

**31:1-8 .ஜனங்களை வழிநடத்திச் செல்லும்படி யோசுவா கட்டளை பெற்றார்.மோசேயின் வயது சென்றமையால், அவர் யோசுவாவை ஜனங்களை வழிநடத்தும்படி கேட்டுக் கொண்டார்.** (எண். 27:18-23). கர்த்தர் மாறாத பிரசன்னம் மோசேயோடு எப்போதும் இருக்கும் என்று கர்த்தர் கூறியிருத்தார். (31:6) அந்த வாக்குறுதிகள் ***யோசுவாவோடும்*** இருக்கும் என்று கூறப்பட்டது.ஏற்ற வேளையில் கர்த்தர் ஊழியங்களை தருவார். (31:7-8, 23, கர்த்தரின் பிரசன்னம் இன்று சபைக்குரியதாக மாறியுள்ளது. (எபி. 13:5).

**31:9-13 "ஒவ்வொரு 7ம் வருடத்திலும் இதனை வாசிக்கவும்."** முழு நியாயப்பிரமாணமும் எழுத்து வடிவில் எழுதிய பிற்பாடு,மோசே அதனை ஆசாரியர்களித்தில் கையளித்து, ஒவ் வொரு சபாத்( ஓய்வு) வருடத்திலும் அதனை மக்கள் மத்தியில் கூடாரப் பண்டிகையின் போதும் வாசிக்கும்படிகேட்டுக் கொண்டான். (31:24-27), உடன்படிக்கைப் பெட்டியின் அருகில் நியாயப்பிரமாணத்தின் புத்தகத்தை வைத்திருக்கும் படிஅறிவுறுத்தினான்.

**31:14-30 "எச்சரிக்கையின் பாடலாக அவற்றைப் பாடவும்".** கர்த்தர் மோசேயிடம் இஸ்ரவேலர்களின் எதிர்கால ஜீவியம் எப்படி அமையும் என்று கூறி இப்பொழுது நீங்கள் இந்தப்பாட்டை எழுதிக்கொண்டு, இதை இஸ்ரவேல் புத்திரருக்குப்படிப்பித்து, இந்தப்பாட்டு எனக்குச் சாட்சியாக இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இருக்கும்படி இதை அவர்கள் வாயில் வழங்கப் பண்ணுங்கள். இந்த பாடலானது, ஜனத்தாரும், கர்த்தரின் கிரியையும், நியாயப்பிரமாணத்தின் அவசியமும், அதை மீறினால் ஏற்படும் தண்டனையும்,இது உங்களுக்கு எதிரான சாட்சியாக நிற்கும் என்ற எண்ணக்கருக்களைக் கொண்ட பாடலாக அமையும்.. (31:21). இந்தப் பாடல் உண்மையாக மாறியதை நியாயாதிபதிகள் புஸ்தகத்தில் காணமுடியும்.

**32:1-47 "மோசேயினுடைய பாடல்கள்".**மோசேயினால் எழுதும்படி சொல்லப்பட்ட பாடல் அதிகாரம் 32 இல் உள்ளது. ஆரம்பமாக, எல்லோரும் வந்து கேளுங்கள், படிப்பிக்கப்பட்ட கொள்கையில் உறுதியாயிருங்கள் வானங்களே, செவிகொடுங்கள், நான் பேசுவேன்; பூமியே, என் வாய் மொழிகளைக் கேட்பாயாக. மழையானது இளம்பயிரின் மேல் பொழிவதுபோல, என் உபதேசம் பொழியும்; பனித்துளிகள் புல்லின் மேல் இறங்குவது போல, என் வசனம் இறங்கும். கர்த்தருடைய நாமத்தை பிரசித்தம் பண்ணுவேன்; நம்முடைய தேவனுக்கு மகத்துவத்தைச் செலுத்துங்கள். (32:1-3)

இஸ்ரவேலர்கள் யாவரும் கர்த்தருடைய நீதியில் பூரணப்படல் வேண்டும் அவர்களைக் கர்த்தர் கூட்டி வந்தார், பாதுகாத்தார்,தேவைகளைச்சந்தித்தார்,.

**2ம்பகுதி;** கர்த்தருடயை கிருபையையும் இரக்கத்தையும் மறந்து கர்த்தரைத் தேடாமலும், நினையாமலும் மறந்துபோனார்கள். இதனால் கர்த்தர் அவர்கள் மீது கடுங்கோபம் மூண்டவராக அவர்கள் தேசத்திலிருந்து அவர்களைக் கலைக்கத் தீர்மானித்தார். (32:26).

**3ம்பகுதி;** (32:28-33 அவர்கள் யோசனை கெட்ட ஜாதி, அவர்களுக்கு உணர்வு இல்லை

**4ம்பகுதி;** (32:34-47) முத்திரை போடப்பட்டிருக்கிறதில்லையோ? என் பொக்கிஷங்களில் இது முத்திரை போடப்பட்டிருக்கிறதில்லையோ? பழிவாங்குவதும் பதிலளிப்பதும் எனக்குரியது; ஏற்றகாலத்தில் அவர்களுடைய கால் தள்ளாடும்; அவர்களுடைய ஆபத்து நாள் சமீபமாயிருக் கிறது; அவர்களுக்கு நேரிடும்காரியங்கள் தீவிரித்துவரும்.

**32:48-52 "வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை பார்பதற்கு மட்டும் அனுமதி.**"நேபோ மலையிலிருந்து வாக்குப் பண்ணப்பட்ட தேசத்தைப் பார்ப்பதற்கு நீ மரணமடைவதற்கு முன்பாக அனுமதிக்கப்படுவாய் என்று மோசேக்கு கர்த்தர் கூறினார். (3:23-29; எண் 27:12-14). ஏனெனில், அவரது கீழப்படியாமையே இதற்கான காரணமாகும். (எண் 20:7-13), அவர் கானான் தேசத்திற்குள் செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

**33:1-25 மோசேயின் இறுதி ஆசீர்வாதம்.** அவர் மரணத்திற்கு ஆயத்தமானபோது, மோசே தன்னுடைய ஜனங்களை வெற்றியுடன் கானானுக்குள் அனுப்புவதற்காக , அவர் தன்னுடைய ஆசீர்வாத்த்தை 12 கோத்திரத்தார் மீதும் கூறினார். இஸ்ரவேலர்களின் ஆசீர்வாதமாக அவர் இரண்டு விடயங்களை ,உச்சரித்துக் கூறினார், கர்த்தருடைய தொடர்ச்சியான பாதுகாப்பும் (33:2)அவருடைய வார்த்தையின் ஆலோசனையும், (33:3).ஆசீர்வாதமானது தீர்க்கதரிசனமாக இருக்கின்றது .மோசே ஒரு தீர்க்கதரிசியான படியால் அவர் 12 கோத்திரத்துக்குமான பல செயற்பாடுகளை முன்னறிவித்தார்.

***33:26-29 "அவருடைய நித்தியபுயங்கள் உனக்கு ஆதாரம்";***மோசே தன்னுடைய இறுதி வாழ்த்துதலில், இஸ்ரவேலர்கள் ஒரு மனமகிழ்வுள்ள ஜனம் என்று கூறுகின்றார், அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்தியபுயங்கள் உனக்கு ஆதாரம்; அவர் உனக்கு முன்னின்று சத்துருக்களைத் துரத்தி, அவர்களை அழித்துப்போடு என்று கட்டளையிடுவார்.

**34:1-12 நேபோமலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடி**;-பின்பு மோசே மோவாபின் சமனான வெளிகளிலிருந்து எரிகோவுக்கு எதிரான நேபோமலையிலிருக்கும் பிஸ்காவின் கொடு முடியில் ஏறினான்; அப்பொழுது கர்த்தர் அவனுக்கு, **தாண் மட்டுமுள்ள கீலேயாத்** தேசம் அனைத்தையும், நப்தலிதேசம் அனைத்தையும், எப்பிராயீம் மனாசே என்பவர்களின்

தேசத்தையும், கடைசிச் சமுத்திரம் வரைக்குமுள்ள யூதாதேசம் அனைத்தையும், தென்புறத்தையும், சோவார்வரைக்குமுள்ள பேரீச்சமரங்களின் பட்டணம் என்னும் ஊர்முதற் கொண்டு எரிகோவின் பள்ளத்தாக்காகிய சமனான பூமியையும் காண்பித்தார். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: நான் உங்கள் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்ட தேசம் இதுதான், இதை உன் கண்காணும்படி செய்தேன்; ஆனாலும் நீ அவ்விடத்திற்குக் கடந்து போவதில்லை என்றார். அப்படியே கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே **கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான்**. அவர் அவனை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான **பள்ளத்தாக்கிலேஅடக்கம்பண்ணினார்**. இந்நாள் வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான். மோசே **மரிக்கிறபோது நூற்றிருபது வயதாயிருந்தான்**; அவன் கண் இருளடையவுமில்லை, அவன் பெலன் குறையவுமில்லை. இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் சமனான வெளிகளில் மோசேக்காக **முப்பதுநாள் அழுதுகொண்டிருந்தார்கள்**; மோசேக்காக அழுதுதுக்கங் கொண்டாடின நாட்கள் முடிந்தது. மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்த படியி னால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்; இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள். மோசே எகிப்து தேசத்திலே பார்வோனுக்கும், அவனுடைய எல்லா ஊழியக்காரருக்கும், அவனுடைய தேசம் அனைத்திற்கும் செய்யும்படி கர்த்தர் அவனை அனுப்பிச் செய்வித்த சகல அடையாளங்களையும் அற்புதங்களையும், அவன் இஸ்ரவேலர் எல்லாருக்கும் பிரத்தியட்சமாய்ச் செய்த சகல வல்லமையான கிரியைகளையும், மகாபயங்கரமான செய்கைகளையும் கர்த்தரை முகமுகமாய் அறிந்த **மோசேயைப்போல, ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை என்று விளங்கும்.**

**உபாகமம், கர்த்தரைப்பற்றிய ஒரு விளக்க வருணனையாகும்**

**கர்த்தரின் ஆள்தத்துவம்**;- "இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்". (6:4)."நான் நானே கர்த்தர், என்னோடேவேறே தேவன் இல்லை"(32:39).

**கர்த்தருடைய மகத்துவம் பெரியது**."உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதிதேவனும், கர்த்தாதிகர்த்தரும், மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார்; அவர் பட்சபாதம் பண்ணுகிறவரும் அல்ல, பரிதானம்வாங்குகிறவரும் அல்ல". (10:17).

**கர்த்தருடைய கிருபை**." நான் மறுபடியும் உனக்குச் சொல்லுகிறேன், உன் நீதியினிமித்தமும் உன் இருதயத்தினுடைய உத்தமத்தினிமித்தமும் நீ அவர்கள் தேசத்தைச் சுதந்தரிக்கும் படிபிரவேசிப்பதில்லை; நீ வணங்காக்கழுத்துள்ள ஜனம். (9;6)

**கர்த்தருயைட அன்பு**

**அவர் இஸரவேலர்களின் முற்பிதாக்களை நேசித்தார்**. அவர் உன் பிதாக்களில் அன்பு கூர்ந்தபடியால், அவர்களுடைய பின் சந்ததியைத் தெரிந்து கொண்டு, உன்னிலும் பலத்த பெரிய ஜாதிகளை உனக்கு முன்னின்று துரத்தவும், உன்னை அழைத்துக் கொண்டுபோய், இந்நாளில் இருக்கிறது போல, அவர்கள் தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கவும், உன்னைத்தமது முகத்துக்கு முன் தமது மிகுந்த வல்லமையினால் எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். (4:37).

**அவர் இஸ்ரவேலை நேசித்தார்**. நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத் திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும் படி தெரிந்து கொண்டார். சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜன மென்று கர்த்தர் உங்கள் பேரில் அன்பு வைத்து உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள். கர்த்தர் உங்களில் அன்பு கூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக்காக்க வேண்டும் என்பதினாலும்; கர்த்தர் பலத்தகையினால் உங்களைப் புறப்படப்பண்ணி, அடிமைத்தன வீடாகிய எகிப்தினின்றும் அதின் ராஜாவான பார்வோனின் கையினின்றும் உங்களை மீட்டுக் கொண்டார். (7:6-8).கர்த்தருடைய ஜனமே அவருடைய பங்கு; யாக்கோபு அவருடைய சுதந்தரவீதம். பாழான நிலத்திலும் ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தரவெளியிலும் அவர் அவனைக் கண்டுபிடித்தார், அவனை நடத்தினார், அவனை உணர்த்தினார், அவனைத் தமது கண்மணியைப் போலக்காத்தருளினார். கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின் மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின் மேல் சுமந்து கொண்டு போகிறது போல, கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்; அந்நிய தேவன் அவரோடே இருந்ததில்லை. (32:9-12).

**கர்த்தர் இஸ்ரவேலர்களைத் தொடர்ந்தும் நேசிக்கின்றார்**. உன் மேல் அன்புவைத்து, உன்னை ஆசீர்வதித்து, உனக்குக் கொடுப்பேன் என்று உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் உன்னைப் பெருகப் பண்ணி, உன் கர்ப்பக் கனியையும், உன் நிலத்தின் கனிகளாகிய உன் தானியத்தையும், உன் திராட்சரசத்தையும், உன் எண்ணெயையும், உன் மாடுகளின் பலனையும், உன் ஆட்டுமந்தைகளையும் ஆசீர்வதிப்பார். (7:13).

**கர்த்தரின் விசுவாசத் தன்மைகள்**.

**வனாத்தரத்தில் தேவைகளைச் சந்தித்தவர்**. உன் தேவனாகிய கர்த்தர் உன் கைக்கிரியை களிலெல்லாம் உன்னை ஆசீர்வதித்து வருகிறார்; இந்தப் பெரிய வனாந்தரவழியாய் நீ நடந்து வருகிறதை அறிவார்; இந்த நாற்பது வருஷமும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருந்தார்; உனக்கு ஒன்றும் குறைவுபடவில்லை என்று சொல் என்றார். (2:7). கர்த்தராகிய நான் உங்கள் தேவன் என்று நீங்கள் அறிந்து கொள்ளும்படிக்கு, நான் நாற்பது வருஷம் உங்களை வனாந்தரத்தில் நடத்தினேன்; உங்கள் மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவும் இல்லை, உங்கள் காலிலிருந்த பாதரட்சைகள் பழையதாய்ப் போகவும் இல்லை. நீங்கள் அப்பம் சாப்பிடவும் இல்லை, திராட்சரசமும் மதுவும் குடிக்கவும் இல்லைஎன்றார்.

**தொடர்ச்சியான பாவத்தின் நிமித்தம் அவர் அப்படிச் செய்தார்**. நீ வனாந்தரத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கினதை நினை, அதை மறவாயாக; நீங்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட் நாள் முதல், இவ்விடத்தில் வந்து சேருமட்டும், கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினீர்கள். ” (9:7). இப்பொழுதும் இஸ்ரவேலே, நீ உன் தேவனா கிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்புகூர்ந்து, உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து, நான்

இன்று உனக்குக் கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ளவேண்டும் என்பதையே அல்லாமல்,வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.

**கர்த்தருடைய வார்த்தை**

**மறை பொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல**

நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறை பொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல. நாங்கள் அதைக்கேட்டு, அதின்படி செய்யும் பொருட்டு, எங்கள் நிமித்தம் வானத்துக்குஏறி, அதை எங்களுக்குக் கொண்டுவருகிறவன் யாரென்று நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுள்ளதும் அல்ல; நாங்கள் அதைக் கேட்டு, அதின்படிசெய்யும் பொருட்டு, எங்கள் நிமித்தம் சமுத்திரத்தைக்கடந்து, அதைக் கொண்டு வருகிறவன் யார் என்று நீ சொல்லத்தக்கதாக, அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல; நீ அந்த வார்த்தையின் படியே செய்யும் பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன்வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது.

**ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்** இஸ்ரவேலரே, நீங்கள் பிழைத்திருக்கும்படிக்கும், உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர்உங்களுக்குக் கொடுக்கிற தேசத்தில் நீங்கள் பிரவேசித்து அதைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கும், நீங்கள் கைக்கொள்வதற்கு நான் உங்களுக்குப் போதிக்கிற கட்டளைகளையும் நியாயங்களையும் கேளுங்கள். நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகியகர்த்தரின் கட்டளைகளை நீங்கள்கைக் கொள்ளும் படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்(4:1-2).

**தியானம்செய்யுங்கள்** நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின் மேல் அடையாளமாகக்கட்டி, உங்கள் கண்களின் நடுவேஞாபகக் குறியாக வையுங்கள்.(11:19).

**அவைகளைஉங்கள்பிள்ளைகளுக்குஉபதேசியுங்கள்**. அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியிலே நடக்கிற போதும், படுத்துக் கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக. அவைகளை உங்கள் வீட்டு நிலைகளிலும் உங்கள் வாசல்களிலும் எழுதுவீர்களாக. (11:19-20)

**அவற்றை செயற்படுத்துங்கள்** நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது(30:14).

நன்றி கர்த்தாவே

திராணி

## உசாத்துணை நூல்கள்.

**THE BIBLE READER'S COMPANION** *By* **Lawrence O. Richards VICTOR BOOKS A Division of Scripture Press Publications Inc. USA Canada England**

**WILLMINGTON'S BIBLE HANDBOOK** *by* **Harold L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

**WILLMINGTON'S GUIDE TO THE BIBLE** *by* **Dr. H. L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

**PARSONS BIBLE PICTURES PARSONS TECHNOLOGY, INC. Cedar Rapids, Iowa**